RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1817

OPEN ACCESS

# கூகை புதினத்தில் தலித்திய சிந்தனை

சி. பவித்ரா [அ, *], கோ. மகாலட்சுமி [அ]

[அ] தமிழ்த்துறை, டாக்டர்.எஸ்.என்.எஸ். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641049, தமிழ்நாடு, இந்தியா.

# Thoughts of Dalitiyam in Koogai Novel

S. Pavithra [a, *], G. Mahalakshmi [a]

[a] Department of Tamil, Dr.SNS Rajalakshmi college of Arts and Science (Autonomous), Coimbatore-641049, Tamil Nadu, India

* Corresponding Author:
spavithra638@gmail.com

Received: 01-09-2022
Revised: 28-10-2022
Accepted: 06-11-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

We are witnessing the development in science field day by day and we can see many progressive developments in literature. Agam and Puram in Tamil literature, theoretically have taken deep root and it spread like a tree and has come to the stage of expressing the life of marginal people. The word 'Dalitiyam' is discussed among many people. The main aim of Dalitism is that the Dalit people, who have been oppressed by the dominant caste for ages, should get their freedom. Today Dalit literature seeks to destroy dominant concepts of equality at all levels. Efforts to abolish caste without destruction, reservation, agitations, uprisings for political and economic equality are the main factors in the development of Dalit literature. The article studies the way how Dalits are portrayed in S. Dharma's work Koogai and about their lifestyles, feelings and thoughts.

**Keywords:** Koogai Novel, Dalitiyam, Koogai, Literature, Agam, Puram

## முன்னுரை

மனித சமூகம் சாதி, மதம், இனம் மொழியால் பிளவுப்பட்டு கிடக்கின்றது. மக்களிடையே மதப்பிரச்சனை, சாதிப்பிரச்சனை காலமாக தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதனால் மனிதச் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏராளமான துன்பங்களையும், சுமைகளையும் பொறுத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய தலித்மக்களின் அவல வாழ்வையும், அவர்களின் மீதான ஒடுக்கு முறைகளையும், சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளையும், சிக்கல்களையும் களையவேண்டியது தற்காலத்தில் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. சாதிய ஏற்றத்தாழ்வுகள் மனிதனின் சொத்தாகவே மாறிவிட்டது. இந்நிலை மாறவே தங்களது படைப்புகளின் மூலம் சாதியப் பாகுபாடுகளை ஒழிக்க வேண்டுமென, சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு படைப்பாளர்கள் தங்களது எழுத்துக்கள் மூலம் வெளிக்கொணர்ந்த வண்ணம் உள்ளனர். அவ்வகையில் கூகை புதினத்தில் காணலாகும் தலித்தியச் சிந்தனைகளை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## தலித்தியம்

தலித்மக்கள் இம்மண்ணுக்கு உரியவர்கள். இவர்களே இம்மண்ணின் மைந்தர்கள் ஆவார். இம்மண்ணுக்கு உரியவர்கள் உரிமைக்காகப் போராடும் அவலநிலையைப் பார்க்கும்போது வேதனை

மிஞ்சுகிறது. இந்நிலையில் சாதியபாகுபாடு, தாழ்வு மனப்பான்மை, அவநம்பிக்கை இவற்றைக் களைவதற்குரிய வழிமுறைகளை வளர்ப்பதைத்தான் தலித் இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

'தலித்' என்பது மராட்டிய மொழிச்சொல். இதற்கு 'மண்சார்ந்த' என்பதுபொருள். மராட்டியத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சி 'தலித் இயக்கம்' எனப் பெயர்பெற்றது. இவ்வியக்கம் சார்ந்து மராட்டியமொழியில் தலித் இலக்கியங்கள் முதலில் தோன்றின. தலித்என்றசொல், அகப்பார்வையில் நசுக்கப்படுதலையே குறிப்பாக உணர்த்தி, உரிமைகுறித்த உணர்வினைத் தன்னுடன் எடுத்துவருகின்றது (Nadarasan, 2012).

இந்திய அளவில் இச்சொல்லுக்கு ஒரு பொருளும், தமிழ்ச் சூழலில் ஒரு பொருளும் தரப்படுவதாக, கூறுகின்றார் (Kesavan, 1998). இவர் 'தலித்' என்ற சொல்வெறும் பெயரிடல்கள் குறித்தசிக்கல்கள் மட்டுமல்ல. தமிழ்த் தேசிய வரையறைக்குள் மட்டுமே இயங்கும் பொழுது தாழ்த்தப்பட்டோர் என்றும், பல்வேறு தேசிய இனத் தாழ்த்தப்பட்டவர்களையும் உள்ளடக்கி இயங்கும்பொழுது தலித் என்றும் அழைத்துக் கொள்கிறோம்" என்கிறார் (Kesavan, 1998). சாதியப் படிநிலைக் கட்டமைப்பில் அடிதள மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், தீண்டதகாதவர்கள், பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என குறிப்பிட்ட மக்களை தலித்மக்கள் எனக் கருதும்போக்கு காணப்படுகின்றது. அவ்வகையில் பள்ளர், பறையர், சக்கிலியர் என்னும் சாதியமக்களின் வாழ்வியலை ஆசிரியர் கூகை புதினத்தில் பதிவு செய்கின்றார்.

## கூகை புதினத்தின் மையக்கருத்து

கூகை என்னும் கோட்டான் இடப்பெயர்ச்சியில் ஆர்வமில்லாத பறவை. மிகுந்த வலிமைக் கொண்டது, அது தன் வலிமையை உணவுக்காக அன்றி மற்ற சமயங்களில் பெரிதும் பயன்படுத்துவதில்லை. இரவில் பலம்கொண்டு இருக்கும் பறவை பகலில் கண்பார்வையற்று இருப்பதால், தன்னைத் தாக்கும் சிறுபறவையைக் கூடஎதிர்க்கும் திறனற்று தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பொறுத்துக்கொள்ளும். கூகையின் தோற்றத்தை அருவருப்பாகப் பார்ப்பதும், கூகையைக் கானுதலை அதன் குரல் கேட்பதை அபசகுணம் எனக் கருதுவதும் இச்சமூகத்தில் இயல்பாகிவிட்டது. இத்தகைய கூகையை தலித்துகளுக்கானக் குறியீடாக்கி உயர் சாதியினரால் ஆதிக்கத்திற்கு உள்ளாக்கப்படும் தலித்மக்களின் வாழ்வியலைக் கூகை புதினத்தில் வெளிப்படுத்துகின்றார் (Dharman, 2017).

"தலித்துகள் எப்போதுமே சரணாகதி அடைந்தவர்களாக, ஆதிக்கசாதி எசமானர்களைச் சார்ந்து நந்திப்பிழைப்பதில்தான் அவர்கள் வாழ்வுரிமை அடங்கியிருக்கிறது என நம்புவோர்களாக அவர்களது ஆதிக்க அதிகாரங்களுக்கு அடிப்பணிந்து கிடப்பவர்களாக உள்ளனர்." (அந்தோனிகுருசு,2006). என தலித்மக்கள் அடையாளம் காட்டப்படுகின்றனர் (Dharman, 2017). இதற்கு சான்றாக கூகை புதினத்தில்,

கீழ்சாதிமக்கள், உயர்ந்தசாதி மக்களுக்கு அடிமைகளாக, அவர்கள் கொடுக்கும் வேலைகளைச் செய்து, தங்களின் அடிப்படைத் தேவைகளான பொருளாதாரம் என அனைத்தையும் நிறைவேற்ற மேல்சாதி மக்களை நம்பி வாழ்பவர்களாக உள்ளனர். அதைத் தொடர்ந்து அந்த ஊரிலுள்ள நடராஜய்யர் என்னும் உயர்சாதியைச் சேர்ந்த ஒருவர் தன் வெளியுர்......மாற்றம் பொருட்டு, தனது நிலங்களைக் குத்தகைக்கு பள்ளக்குடி மக்களுக்கு கொடுத்துச் செல்கிறார். விளைநிலத்தில் உழைத்து பணம் சம்பாதித்து, பொருளாதாரத்தில் சற்று ஏற்றமடைந்த தலித்மக்கள், மீண்டும் சில மேல்சாதியினர் மற்றும் ஜமீன்தாரின் கொடுமைகளுக்கு ஆளாகி கொத்தடிமைகளாக மாறுகின்றனர். தலித்துமக்கள் தங்கள் நிலையில் முன்னேற்றம் அடையும்போது, ஏதேனும் ஒருவகையில் உயர்சாதியினரால் அடிமைப்படுத்தப்படுகின்றனர். என்பதையே கூகைப் புதினம் விளக்குகின்றது.

## தீண்டாமை

இந்திய நாட்டில் நிலவும் சமூக அமைப்பானது சாதி, வர்க்க வேறுபாடுகளைத் தமக்குரிய நிலைக்களமாகக் கொண்டுள்ளது. உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுப்பாட்டின் அடிப்படையில்

“தீண்டத்தகாதோர்” மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியினர் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களது மானுடப் பண்பு அழிக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு சமூகக் குழுவினரை ஏனையச் சமூகக் குழுவினரோடு சம உரிமையோடு தொடர்புகளைப் பேணுவதைத் தடுக்கும் ஒரு சமூக முறையாக தீண்டாமை உள்ளது. தீண்டாமை பலவடிவங்களில் உரிமையைப் பறிக்கின்றது.

“தீண்டாமை என்பது தனிவகைப்பட்ட நோய். தீண்டாமை பல்வேறு மக்களுக்கு உரிமை மறுப்பது, சுரண்டலுக்குத் துணைபோவது. வசிக்க வீடு, குடிக்கத் தண்ணீர் தர மறுக்கும் அவமானம்தான் தீண்டாமை. இருளுக்குள் ஒளிபாய்வதை விரும்பாதது தீண்டாமை”. என்ற அம்பேத்கரின் கருத்து குறிப்பிடத்தக்கது.

## சமூகத்தின் பார்வையில் காணலாகும் தீண்டாமை

- தீண்டப்படாதவர்கள் செருப்புபோட அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி அவர்கள் அணிந்தாலும், மேல்சாதியினர் ஒருவரை சந்திக்கும்போது அவர்கள் தங்கள் காலணிகளைக் கழட்டிவிடுதல்.
- ஊர்த்தெருக்களில் மேல்சாதிமக்கள் வாழும் ஊர்த்தெருக்கள் வழியாகத் தீண்டப்படாதோர் மிதிவண்டிகளில் ஏறிவர அனுமதிக்கப்படுவதில்லை.
- கிராமப்புறங்களில் தலித்துமக்கள் வாழ ஊருக்கு வெளியே தனியான சேரிகள்.
- தண்ணீர் கேட்கும் தலித்துகளுக்கு குவளைகளில் தண்ணீர் தராமல் கைகளை ஏந்திக் குடிக்கவைப்பது போன்றவைகளைத் தலித்திய மக்கள் சந்தித்து உள்ளனர்.

பொதுக் கிணறுகளில் தலித் மக்களுக்கு வாளியைத் தொட்டுத் தண்ணீர் இரைக்கும் உரிமை கிடையாது. உயர்சாதியினர் தண்ணீர் ஊற்றுவார்கள் என்று காத்திருக்கும் அவல நிலையினை கூகைபுதினத்தில் “சாமியோவ்… இங்க ஒரு வாளி ஊத்துங்க சாமி எம்புட்டு நேரம் நிக்கிறது, கால்கடுக்கு தாயி. குடத்தைவிட்டு இரண்டுமுழம் உயரம்வாளியைத் தூக்கி தண்ணீர் ஊற்றியபடியே வைத்த ஒருபொம்பிளை” (Dharman, 2017).

உணவகத்தில் தலித்துமக்கள் மேசையில் அமர்ந்து உணவு அருந்தியதைப் பொறுக்காத உயர்சாதியிரின் செயலினை “நாறப்பயகளே, ஒங்களுக்கு கேக்குதோ களப்புக்கடச் சோறு அதுவும் பெஞ்சுமேல ஒக்காந்து தொரைகளுக்கு ஒய்யாரத்துல சோறு. வெள்ளையும் சொல்லையுமாப் போய்ட்டாப்ல நீங்க மோலத்தாரா ஆகிருவிங்களோ, அதுதா ஒங்க மூஞ்சியிலயே ஒட்டிருக்கே ஜாதிகெட்ட பயகனு” (Dharman, 2017). மது அருந்தும் கடைகளில் தனிக்குவளை முறை “பள்ளக்குடி, சக்கிலியக்குடி, பறக்குடிக்காரர்கள் குடிக்கும் கண்ணாடிகிளாஸ், பக்கத்தில் ஆவாரஞ்செடி முட்டுக்குள் தனியேகிடந்தது” (Dharman, 2017).

தாழ்த்தப்பட்டவர்கள் பொது இடங்களில் உயர்சாதியினருக்கு நிகராக அமர்தல், கடைகளில் ஒரே குவளையைப் பயன்படுத்துதல், தொடுதல் போன்ற செயல்கள் ‘தீட்டு’ எனக் கருதுவதை மேற்காணும் நிகழ்வின் மூலம் அறிய முடிகிறது.

## முதலாளி -தொழிலாளி

பொருளாதார நிலையில் மேல்சாதியினருக்கு இணையாக பொருளாதார வசதிகள் இல்லாமல் இருத்தல், தொழிலாளியாக வாழும் நிர்பந்தம் தலித்மக்களுக்கு ஏற்படுகின்றது. “இங்கு தொழிலாளியாக இருப்பவன், முதலாளியாக இருக்கும் உயர்சாதிக்காரனுக்கு அடிமையாக வாழும் நிலையைத்தான் முதலாளி-தொழிலாளி என்ற இருமை எதிர்வுகளாக மார்க்ஸியம் கருதுகின்றது.” என்று மார்க்ஸ் குறிப்பிடுகிறார் (Marks, 2009). அதற்கினங்க, தலித்மக்கள் என்றழைக்கப்படுவோர், சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் புறக்கணிக்கப்பட்டவர்களாக, பாதிக்கப்பட்டவர்களாக, ஆதிக்க அதிகார மிரட்டலுக்கு அடங்கி பணிச்செய்பவர்களாக, எல்லா நிலைகளிலும் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருந்துவருவோர் எனத் தலித்மக்களுக்கான அடையாளம் காலம்காலமாக வரையறுக்கப்பட்டு வருகின்றது. இதற்குச் சான்றாக, நடராஜய்யர் தலித் மக்களுக்காக தானமாக கொடுத்த வயல்களில்

சொந்தமாக விவசாயம்செய்து, தங்களின் பொருளாதார நிலையில் மாற்றம் பெற்றிருப்பினும், மக்களின் மனநிலையில் மாற்றம் பெறவில்லை என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். சீனி என்னும் பள்ளக்குடியைச் சார்ந்த ஒருவன் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டிருப்பினும் மேல்சாதியினருக்கு தாங்கள் சேவகர்கள் என்னும் என்னம் மாறாமல் இருப்பதை, "என்ன சாமி என்னைக்கு நாங்க ஒங்கள மதிக்கல, எதுல நாங்க ஒங்கசொல்ல மீறிப் போயிருக்கோம், என்னைக்குமே இந்த சீனிப்பயலோட தோலு ஒங்ககாலுக்குச் செருப்பு. எங்க சாமிபோயிருவம்? நொண்டிக் கோழிக்கு ஒரக்கடதான் தஞ்சம்னு அடிச்சாலும் மிதிச்சாலும் ஒங்க காலடியிலதான் கெடக்கோம்" (Dharman, 2017). இதன்வழி தலித்துமக்கள் உயர்சாதியினரை அடிப்பணிந்து வாழ்கின்றனர் என்பது புலப்படுகின்றது. இதன் வழி பொருளாதார ரீதியாக ஒருவரை சார்ந்து வாழும்நிலை ஏற்படாதபோது, தன்மானத்துடன் வாழ தலித் மக்களின் மனநிலையில் மாற்றம் தற்காலக்கட்டத்தில் தேவையான ஒன்றாகிறது

## தலித்பெண்கள்

ஆண்களாலும் ஆதிக்க வர்கத்தினராலும் சாதிவெறியில் சிக்குண்ட தலித்பெண்கள் ஒடுக்கப்பட்டு பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வரும்நிலை பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. மேல்சாதியினரால் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் பெண்களின் நிலை குறித்து ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். உயர் சாதியை சேர்ந்த ஒருவன் தலித் பெண்களின் விருப்பமின்றி கட்டாயப்படுத்தி அடைய என்னுவதை, "யேல, கருப்பிய எங்கல காணும். உள்ளதான் இருக்காளா, சரி இந்தாப் போயி புங்கமரத்து ஓடையில மாப்ள சாராயம்விப்பான். ஒருபாட்ட வாங்கிக்கோ, நிய்யும் ரெண்டுகௌாசு ஊத்திக்கோ. கிழிந்த கோரம்பாயை உதறித் தரையில் விரித்தார். கருப்பி வழக்கம்போல் பருந்தைக்கண்டு பதுங்கும் கோழிக்குஞ்சைப் போல் பாயில்படுத்து முடங்கினாள்". தலித்பெண் என்பதால் மேல்சாதியினரின் இச்சைக்கு பெண் விருப்பமின்றி வேறுவழியின்றி இணங்கும் சூழலுக்கு ஆளாகின்றாள் (Dharman, 2017). இத்தகைய கொடுமையில் அப்பெண்களின் கணவர்களே காவல்காரர்களாகவும், வேலைக்காரர்களாகவும் இருக்கும் நிலையில் தலித்தியமக்கள் வாழ்கின்றனர்.

சக்கிலியக்குடி சண்முகம் கருப்பி தம்பதியரின் ஒரே மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கச் சென்றவர்களை, மேல் சாதியினரான முத்தையாபாண்டியன் தடுத்து, தெருவில் யாசகம் வேண்டிநிற்கும் ஒருவனுக்கு கட்டாயத் திருமணம் செய்துவைத்து, அப்பெண்ணைத் தனதுபாலியல் இச்சைக்கு ஆளாக்கிகொண்டார். "சாமிநீங்க நல்லாருக்கணும் வேண்டாஞ்சாமி, சாமி, அது ஒங்களுக்குப் பெறந்த புள்ளசாமி, இத்தனவருசமா என்னயத்தின்னது காணலியாசாமி? சாமிஇந்தாசாமி எடுத்துக்கோங்கசாமி, அவளவிட்ருங்கசாமி." இப்பதிவின்வழி தாய்மகள் என வேறுபாடு பார்க்காமல் தன் சுயநலத்திற்காக எல்லை மீறும் மேல்சாதிகாரரின் கொடூரத்தால் பெண் அடையும் வேதனை, தங்களின் எதிர்ப்பைத் தெரிவிக்க உரிமையற்று வாழும் பெண்களின் நிலை வெளிப்படுகின்றது (Dharman, 2017).

## பொருளாதாரப் பின்புலம்

ஒரு சமுதாயத்தில் ஒழுங்கமைவுகளுள் முக்கியமானது பொருளாதார ஒழுங்கமைவு ஆகும். பெரும்பான்மையான சமூகங்களின் பின்னடைவுகளுக்குப் பெரிதும் காரணமாக இருப்பவை பொருளாதாரப் பிரச்சனைகளே, பொருளாதார அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளே வர்க்கப் பிரிவினைகளை ஏற்படுத்துகின்றன.

கூகை புதினத்தில், ஆண்டாண்டு காலமாக மேல்சாதியினர் நிலத்தில் பாடுபட்டு, தங்கள் வியர்வைசிந்தி, தங்களின் உழைப்பு முழுவதையும் மேல் சாதியினருக்கே பெற்றுதரும் தலித்மக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். வாரத்திற்கு ஒருநாள் பொருள் ஏதும்பெறாமல் ஜமீன்மற்றும் மேல்சாதியினருக்கு இலவசமாக வேலைசெய்துக் கொடுக்கும் முறை காணப்படுகின்றது. தலித்துகளின் உழைப்பினால் ஏற்பட்ட பொருளாதாரச் சுரண்டல் அளவிடற்கரியது. "நாகம்பட்டிஜமீன்ல இன்னைக்கும் வாரத்துல ஓசிவேலதான் செய்றாங்க, பரம்பரபழக்கம்". தங்களுக்கென நிலங்கள் இல்லாமல் குடியானவர்களை கொண்டு வாழ்பவர்களின் நிலை புலப்படுகின்றது (Dharman, 2017).

கூகை புதினத்தில் நிலம் ஏதுமில்லாது வாழ்ந்த பள்ளரின மக்கள் அந்த ஊரில் வாழ்ந்த நடராஜய்யரின் உதவியால் ஐயரிடம் பெற்றநிலத்தில் உழைத்து நாளடைவில் பொருளாதாரத்தில் முன்னேறிதங்களின் அடிப்படை தேவையை தாங்கலேப் புர்த்திசெய்து வாழ்வதை.

"அவங்களுக்கு என்னைக்கி ஐயப்பய வயக்காட்ட விட்டுட்டுபோனானோ அன்னையிலிருந்து அந்தபயகபோக்கு மாறிபோச்சு. இப்ப ரெண்டுபயக சைக்கில்வேற வாங்கிட்டான். வாரசந்தைக்கு நாலுஜோடி மாடுங்கவேற வாங்கப் போறாங்களாம். சாப்பாட்டுக்கு நெல் இருக்கு, துட்டுக்கு பயிறுபச்ச வெளஞ்சிருச்சி டவுன்ல போயித் துட்டுக்கு வேளையும் செய்றாங்க கையிலதுட்டு ஏறிப்போச்சி." (Dharman, 2017). மூன்றுவேளை உண்பதற்குத் தேவையான உணவைகூட பெற இயலாத நிலையில் தலித்து மக்கள் தங்களது வாழ்வியல் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து பொருளாதார ரீதியாக சற்று முன்னேற்றம் பெற்றிருப்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

## தலித்துகள் மீதான வன்முறையில் காவல்துறையின் பங்கு

பலவீனமான பிரிவு மக்களுக்கு எதிராக காவல்துறை அமைப்பில் ஒரு பாகுபாடு நிலவுவதும், சாதி அதில் ஒருமுக்கிய அங்கம் என்றும் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளின் அறிக்கை சுட்டிக் காட்டுகின்றன. அவ்வகையில் சில காவல் துறையினரின் வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் சித்திரம்பட்டி கிராமத்தில், கணவன் செய்த தவறுக்காக தவறு செய்தவனின் குடும்பத்திலுள்ள பெண்கள் குழந்தைகள் என அனைவரையும் கொடுமை செய்பவர்களாக இருக்கும் காவல் துறையினரை ஆசிரியர்பதிவு செய்கின்றார். "வீட்டுக்குள் அப்புச்சுப்பனின் பெண்டாட்டி அய்யனாரின் அம்மாள் அம்மணம் மறைக்க போராடும் திரௌபதியாய் நின்றாள். துயிலுரியும் துரியோதனனாய் ஏட்டையா, பக்கத்தில் மூன்று போலீஸ்கார்கள். வீட்டின் ஓரத்தில் சுருண்டு கிடக்கும் இரண்டு குழந்தைகள். ரவிக்கையில்லா மார்பகங்கள் குதியாட அவள் போராடினால், கும்பிட்டால், கதறினால், காலில் விழுந்தால்". என்று அப்புச்சுப்பன் செய்த தவறுக்காகத் தன்னை கைது செய்யவந்த காவல்துறையினர் அவன் தப்பித்து சென்ற சினத்தில் தனது குடும்பத்து பெண்களையும், குழந்தைகளையும் தகாத வார்த்தைகள் கூறி அடித்துக் கொடுமை செய்வதன்வழி காவல் துறையினரின் தலித்மக்கள் மீதான வன்முறை புலப்படுகின்றது (Dharman, 2017).

பள்ளக்குடி மக்கள் சற்று பொருளாதாரத்தில் முன்னேறி தங்களின் சொந்த நிலங்களிலேயே தொழில் செய்து பிழைப்பதைப் பொறுக்க முடியாத ஜமீன், தலித்து மக்கள் தன்னைக் கொள்ள முயற்சி செய்வதாக கொடுத்த பொய்ப் புகாரின் பேரில் காவல்துறையினர் ஒரு கிராமத்திற்கு செய்யும் கொடுமைகளை பதிவு செய்யுமிடத்து, "சித்திரம்பட்டி பள்ளக்குடி சுடுகாடானது, தெருவில் நடமாடக்கூட ஆள் இல்லை இளவட்டங்கள் எல்லோரையும் போலீஸ் அள்ளிள்கொண்டு போனது, வில்வண்டியைமறித்து ஜமீனைக் கொலை செய்ய முயன்றதாக வழக்கு பதிவானது. தினம் போலீஸ் வந்து தெருவை நாசமாக்கியது" (Dharman, 2017).

உயர்சாதியினருக்கு முன்னால் உழைத்து முன்னேற நினைக்கும் காரணத்தினால், இத்தகைய வன்முறைப் போக்கானது தலித் மக்கள் மீதுகட்டவிழ்த்து விடப்பட்டுகின்றது. 'காவல்துறை உங்கள் நண்பன்' என்று கூறுவது, ஆதிக்கசாதியினருக்கு மட்டும்தான். தலித்துகளுக்கு அல்ல எனும் நிலையானது மேல்சாதியினருக்கு சாதகமாக இருக்கும் சிலகாவல் துறையினரால் இங்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது

## உரிமை மறுப்பும் எதிர்ப்பும்

தலித் மக்கள் தங்களின் சொந்த நிலத்தில் வேலைசெய்வதால், உயர்சாதியினரின் வேலைகளை செய்ய நேரமும், கட்டாயமும் இல்லாததால் தங்களின் வேலைகளை மட்டும் செய்வதைப் பொறுத்துக் கொள்ளாத உயர்சாதியினர், தலித்மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைத் தடைச் செய்கின்றனர்.

"ஒழுங்கா ரெண்டு பயகளும் துட்டிவீட்டு வேலசெய்யல, நல்லதண்ணி எடுக்க கெணத்துக்கு வரக்கூடாது, சாமான் வாங்க கடைக்கு வரக்கூடாது, அதுக்கு மேல கீச்மூச்னாரெண்டு தெருவையும் கொளுத்தி சாம்பலாக்கிப்புடுவம்". பள்ளரின மக்களுக்குத் தண்ணீர் மறுக்கப்பட்டது. இக்கூற்றின்வழி உயர்சாதியினரின் அதிகாரம் வெளிப்படுகின்றது (Dharman, 2017).

தலித் மக்கள் தங்களுக்குள் உள்ள ஒற்றுமையின் காரணமாக உயர்சாதியினரின் செயலுக்கு அடிப்பணியாமல் தங்களின் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து எதிர்வினையாற்றுவதை புதினத்தில் ஆசிரியர்பதிவு செய்கின்றார். "எங்கள் ரத்தம்படாத கிணறுகள் உண்டா? எங்கள் வேர்வைபடாத தண்ணீர் உண்டா? அப்படிவெட்டிய கிணறுகளில் நாங்கள் வெளியேநின்று தண்ணீர்குடித்து தாகம்தீர்த்தோம். முதன் முறையாக பள்ளப்பெண்கள் கிணறுகளில் வாளிகொண்டு தண்ணீர் இறைத்துப் பழகிபானை நிரப்பினார்கள். "அப்புச்சுப்பன்மகன் அய்யர்வீட்டு தாழ்வாரத்தில் சின்னக்கடை ஒன்றுவைத்தான்" (Dharman, 2017). இதன்வழி பள்ளரின மக்கள் தங்களுக்கு நடக்கும் அநீதிகளை எதிர்க்கும் துணிவு பெற்று, தங்களின் தேவைகளுக்கு மேல்சாதியின மக்களை எதிர்பார்த்து வாழ்வதை விடுத்து, தங்களின் தேவைகளைத் தாங்களே நிறைவேற்றுவதன் வழி தலித் மக்கள் தங்கள் நிலையில் முன்னேற்றம் பெற்றுவருவது வெளிப்படுகின்றது.

## உழைப்பு

தலித் மக்களின் உழைப்பை உறிஞ்சி வாழும் அட்டைப் பூச்சிகளாக உயர்சாதியினர் உள்ளனர். தலித் மக்களின் வாழ்வியல், அரசியல், பண்பாடு, பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின்தங்கியநிலையில் உள்ளனர். தலித் மக்கள் மேல்சாதியினரின் பண்ணையில் வேலை செய்வது, பிணம் எடுத்தல், இறப்புச் செய்திசொல்லுதல், பறை அடித்தல், ஆடுமாடுகளை மேய்த்துக்கட்டுதல் போன்ற வேலைகளைச் செய்து வருகின்றனர்.

உழைப்பிற்காகவே பிறப்பெடுத்த மக்களாகத் தலித்துகள் காணப்படுகின்றனர். இவர்களின் உழைப்பின் பயனை அனுபவிக்கக்கூடியவர்களாக மேல்சாதிமக்கள் உள்ளனர். உடல் உழைப்பைச் செய்யக்கூடியவர்கள், விளைவிக்கும் உயர்தரமான பொருட்களை, மூளைஉழைப்பு செய்கின்றவர்கள் பயன்படுத்துகின்றனர். ஆனால் உடல்உழைப்பு செய்தவர்களுக்கு தரமானபொருள் எதுவும் கிட்டுவதில்லை. "அவங்களுக்கு காடுகரையில்ல, வயலில்ல, அதுவும் போக தலமொறதல மொறயா நம்மவயல்ல ஒழச்சதும் அவங்கதான. சும்மாவா ஒழச்சாங்க? கூலிவாங்கிட்டுதன வேலசெஞ்சாங்க? நாகப்பட்டிஜமீன்ல இன்னைக்கும் வாரத்துலஒருநாள் ஓசிவேலதான் செய்றாங்க, பரம்பரபழக்கம். ஒழைக்கபொறந்த பயகதான, அடிமவேல செய்யபொறந்த பயக, ஒழைக்க வேண்டியதான" (Dharman, 2017). இதன்வழி தலித்மக்கள் தங்கள் நிலையில் முன்னேற்றம் காணும்போது, விழிப்புணர்வு பெறும்போது, உயர்சாதியினரால் ஒடுக்குதல், தலித்மக்களை அடிமைகளாகவே வைத்துக் கொள்ளமுயலுதல், பரம்பரைத் தொழிலைச் செய்யத்துண்டுதல் போன்ற அவலங்கள் நிகழ்தப்பெறுவது வெளிப்படுகின்றது.

## உழைப்பு சுரண்டல்

உயர்சாதியினரின் வீட்டின் வேளாண் தொழிலுக்கு தலித்மக்களின் உழைப்பு பெரும்பங்காகும். தங்களின் வயல்களில் அனைத்து வேளைகளை செய்பவற்களாக விளங்கியவர்கள் தற்போது சொந்தமாகநிலம் உள்ளதால், உயர்சாதியினரின் வேலைகளுக்குச் செல்லமுடியாது தங்களின் நிலங்களில் உழைக்கின்றனர். அதை அனுமதிக்க இயலாத ஜமீன் மற்றும் உயர்சாதியினரின் நடவடிக்கைகளை ஆசிரியர்பதிவு செய்யுமிடத்து. "இனிமே எல்லா ஆளுகளும் அங்கதான்போவாங்க, நாலுதுட்டு கையில வந்துட்டா நம்மள மதிப்பானா? ஒழைக்கட்டும், நெல்வெளையட்டும்டா, அறுவட நம்மபண்ணிட்டுப்போவம்." இதன்வழி ஜமீன் மற்றும் உயர்சாதியினரை எதிர்த்து தலித்மக்களால் எச்செயலையும் நிறைவேற்றஇயலாது என்ற நிலையில், தலித் மக்களிடத்து கொண்டுள்ள ஆதிக்கம் வெளிப்படுகின்றது (Dharman, 2017).

## எதிர்ப்புணர்வு

தலித் மக்களை அடிமைகளாகவே நடத்தி சுகம் கண்டவர்கள் உயர்சாதியினர். காலங்காலமாகவே தாங்கள் சுரண்டப்படுவதை அறிந்து, அதிலிருந்துமீண்டு, தங்களின் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள தலித்மக்கள் முற்படுவதை ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். “யேல, சீனி ஒங்கமனசுல என்னதான் நெனச்சிட்டு இருக்கீங்க துட்டி விழுந்து எம்புட்டு நேரமாகுது, யாரு துட்டிசொல்லிப்போவா, யாரு தேர்க்கெட்டுவா, யாரு குழிதோண்டப்போவா, “சாமி முந்தி ஒருதுட்டிவிழுந்தா, ஆளுக்கு அஞ்சோபத்தோ கெடைக்கும்னு நாயா அலஞ்சோம், எல்லா வேலையும் செஞ்சோம். இப்ப எங்கவேலையப் பாக்கவே சரியா இருக்கு, போய்ப்பாருங்க தெருவுல ஒருபய கெடையாது, எல்லாப் பயகளும் வயக்காட்ல நிப்பான்.” என்ற சீனியின் வழி ஆண்டாண்டு காலம் மேல்சாதியினரிடத்து அடிமைப்பட்டிருந்த நிலையிலிருந்து மக்கள் விடுபடத்துணிவதின்வழி இச்சமூகத்தின் முன்னேற்றம் வெளிப்படுகின்றது.

## ஒற்றுமையுணர்வு

“ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு நம்மில்

ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு”

என்னும் பாரதியின் வரிகளுக்கு இணங்க, ஒற்றுமையோடுகூடிய மனிதர்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுவர். அவ்வகையில்,

மக்கள் சாதியால் பிரிக்கப்பட்டிருந்தாலும், ஒருசாதியினருக்குள் உள்ள ஒற்றுமையானது தங்களின் வாழ்வைமாற்றும் என்பதை பேச்சி என்னும் பெண்ணின் உதவும் பண்பின் மூலம் இப்புதினத்தில் ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். “ஒரு நாதியில்லனு ஒப்பாரி வெச்சியே, இப்ப என்ன கொறச்சல் ஒனக்கு? தலைக்கு தண்ணி ஊத்துற வீடுமாதிரியா இருக்கு? கல்யாண வீடுமாதிரியில்ல இருக்கு? பேச்சியக்கா ஆருவீட்ல என்ன விசேஷம்னாலும் கால இழுத்துட்டுப் போயிகாட்டிரால்ல, அந்தக்கூட்டம் எங்கபோகும்”. “சுப்பிரமணியபுரம், சிதம்பரப்பட்டி பறக்குடிஜனங்களும், சக்கிலியக்குடி ஜனங்களும் ஆளுக்கொரு வாழைப்பழத்தாரோடு வந்தபோது பேச்சி பூரித்துப்போனாள். அப்புச்சுப்பனுக்கும் அய்யனாருக்கும் தான் கோர்ட்டுக்கு அலைந்ததின் பலனையும் கல்குவாரியில் நாதியற்றுச் செத்துக்கிடந்தவர்களுக்கு தான் முன்னின்று உதவியதையும் ஜனங்கள் மறக்கவில்லை என்று நினைத்துக் கொண்டாள் (Dharman, 2017).”

பேச்சி என்னும் பெண் தன்கணவனை இழந்து சொந்தங்கள் யாருமின்றிதன் பெண்பிள்ளையை வளர்த்துவருகிறாள். அப்பெண்ணின் உதவும் உயர்ந்த குணத்தினால் இருஊர்மக்களை உறவாகப்பெற்றாள். இதன்வழி தலித்து மக்களிடையே காணப்படும் நற்குணங்களையும் அறிய முடிகின்றது.

## முடிவுரை

இன்றைய உலகில் தலித் மக்களின் வளர்ச்சிக்காக எத்தனைப் போராட்டங்கள் நடத்தினாலும், விழிப்புணர்வுபெறச் செய்தாலும் இன்னமும் சில உயர்சாதியினரால் பல்முனைத்தாக்குதலுக்கு உட்படுத்தப்படும் தலித் மக்கள் சாதி, சமயம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு எனப் பலதளங்களில் அடிமைப்படுத்தப்படுகின்றனர். இத்தகைய நிலைகளிலிருந்து தலித் மக்கள் விடுதலைப்பெற்று ஒற்றுமையும், தன்மான உணர்வும் தோன்றுதல், சாதியை ஒழிக்க, ஒடுக்கப்பட்ட அனைத்துத் தளங்களிலிருந்தும் மீட்சிபெறவிளைதல் முதலான சிந்தனைகள் இவ்வாய்வில் எடுத்துக் காட்டப்படுகின்றது. இவ்ஆய்வில் வேளாண்மைமையைத் தொழிலாகக் கொண்ட தலித்மக்களாக பள்ளர், பறையர், சக்கிலியர் என்னும் மூன்று சாதியின மக்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இப்பிரிவில் பள்ளரின மக்களின்நிலை பொருளாதாரத்தில் மேம்பட்டுள்ளநிலை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தலித்

மக்களுக்கும் உயர்சாதியின மக்களுக்கும் இடையே காணலாகும் எதிர்ப்புகளையும், ஒற்றுமைகளையும் இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

## References

Dharman, S. (2017) Koogai, Adaiyalam Pathippagam, Chennai, India.

Kesavan, K. (1998) Tamil Mozhi Enam Naadu, Alaikal Veeliyeedu, Chennai, India.

Marks, A. (2009) Dalit Arasiyal, Ehir Veeliyeedu, Pollachi, India.

Nadarasan, T.S. (2012) Thiranaivuk Kalai, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License